ஞாயிறுக்கிழமைதோறும்
தினமணியுடன்...
தினமணி கதிர்
படியுங்கள்
இளமை! புதுமை! இனிமை!

தினமணி
வியாழக்கிழமை, 30 ஜூலை 2026

ஞாயிறுதோறும்
தினமணியுடன்...
தினமணி கொண்டாட்டம்

மெட்ரோ ரயிலில் பயணித்து ஆய்வு செய்தார் முதல்வர் விஜய்

சென்னை, ஜூலை 29: சென்னை மெட்ரோ ரயில் 2-ஆம் கட்ட திட்டப் பணிகளை மெட்ரோ ரயிலில் பயணித்து முதல்வர் ச.ஜோசப் விஜய் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

சென்னையில் 2-ஆம் கட்ட மெட்ரோ திட்டப்பணிகளுக்கான கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இச்சூழலில் அரசினர் தோட்டம் மெட்ரோ நிலையத்திலிருந்து நந்தனம் மெட்ரோ நிலையத்துக்கு மெட்ரோ ரயிலில் கட்டணம் செலுத்தி முதல்வர் ஜோசப் விஜய் புதன்கிழமை பயணம் செய்து ஆய்வு மேற்கொண்டார்.

இதையடுத்து, நந்தனத்தில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மெட்ரோ கட்டடத்திலுள்ள இயக்கக் கட்டுப்பாட்டு மையத்தைப் பார்வையிட்டு, மெட்ரோ ரயில்களின் இயக்கத்தைக் கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், மெட்ரோ ரயில் திட்டத்தின் கட்டம் - 1, 2 மற்றும் அதன் முன்னேற்றம் குறித்தும், எதிர்கால விரிவாக்கப் பணிகள், அதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் கேட்டறிந்தார்.

சென்னை மெட்ரோ ரயிலில் புதன்கிழமை பயணம் செய்த முதல்வர் ஜோசப் விஜய்யின் முகத்தை வாஞ்சையுடன் தடவிய பெண்மணி.

தொடர்ந்து, பயணிகள் மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து தங்கள் பயணத்தின் இறுதி இடத்தினைச் சென்றடைவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இதர போக்குவரத்து வசதிகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

அதையடுத்து, மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை 5 -ஆவது வழித்தடத்துக்குள்பட்ட கத்திப்பாரா பகுதியில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை முதல்வர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், 4-ஆவது வழித்தடத்தில் அமைந்துள்ள போரூர் புறவழிச்சாலை மெட்ரோ நிலையத்தை ஆய்வு செய்து, அங்கிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை மெட்ரோ நிலையம் வரையும், அங்கிருந்து மீண்டும் போரூர் வரையும் ஓட்டுநர் இல்லாமல் தானியங்கி முறையில் இயக்கப்படும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்து சோதனை ஓட்டத்தைப் பார்வையிட்டதுடன், விரைவில் திறக்கப்படவுள்ள புதிய வழித்தடத்தின் செயல்பாட்டு ஆயத்தப் பணிகளையும் அவர் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் நெ.மரிய வில்சன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம்.ஹரிஷ், ரேவந்த் சரண், தலைமைச் செயலர் மு. சாய்குமார், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் மு.அ. சித்திக் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பாலியல் குற்ற வழக்குகளை இரண்டு மாதங்களில் விசாரித்து முடிக்க சிறப்பு நீதிமன்றங்களுக்கு உத்தரவு

சென்னை, ஜூலை 29: பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை இரண்டு மாதங்களில் விசாரித்து முடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என முதன்மை அமர்வு மற்றும் மகளிர் சிறப்பு நீதிமன்றங்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

திருவண்ணாமலைக்கு சுவாமி தரிசனம் செய்ய தனது குடும்பத்துடன் வந்த ஆந்திரத்தைச் சேர்ந்த இளம்பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்த வழக்கில், கைது செய்யப்பட்ட காவலர்களான சுந்தர் மற்றும் சுரேஷ் ராஜ் மீதான வழக்கை விரைவாக விசாரிக்கக் கோரி பாதிக்கப்பட்ட பெண் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

அவரது மனுவில், மாநிலம் முழுவதும் போக்ஸோ மற்றும் மகளிர் சிறப்பு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரங்களை தெரிவிக்க உத்தரவிட வேண்டும் எனவும் கோரியிருந்தார். இந்த வழக்கில் வாதங்கள் நிறைவடைந்து தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் தலைமை நீதிபதி எஸ். ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அமர்வு புதன்கிழமை அளித்த தீர்ப்பில், அனைத்து முதன்மை அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் மகளிர் சிறப்பு நீதிமன்றங்கள், பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை இரண்டு மாதங்களில் விசாரித்து முடிப்பதற்கான அனைத்து விதமான முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

பெண்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய போலீஸாரே பாலியல் வன்கொடுமை சம்பவங்களில் ஈடுபடும் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

போலீஸாரின் இதுபோன்ற அதிகார துஷ்பிரயோகங்களைத் தடுக்க, இரவு நேரோந்து பணிகளை ஆண்டு தோறும் டிஜிபி மறு ஆய்வு செய்ய வேண்டும். அதே போல, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளின் விசாரணையை தேவையின்றி ஒத்திவைக்கக் கூடாது என, உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர் அனைத்து நீதிமன்றங்களுக்கும் சுற்றறிக்கை பிறப்பிக்க வேண்டும்.

மேலும், போக்ஸோ வழக்குகளில், வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட 30நாள்களில் பாதிக்கப்பட்ட குழந்தையிடம் வாக்குமூலம் பதிவு செய்து, ஓராண்டில் போக்ஸோ சிறப்பு நீதிமன்றங்கள் விசாரணையை முடிக்க வேண்டும்.

மாநில நீதித்துறை பயிற்சியகம், இதுகுறித்து போக்ஸோ சிறப்பு நீதிமன்ற நீதிபதிகளுக்கு சிறப்பு பயிற்சி வழங்க வேண்டும். கடலூர், திண்டுக்கல், மதுரை மற்றும் தூத்துக்குடியில் போக்ஸோ நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடங்களை விரைந்து நிரப்ப வேண்டும்.

மாநிலம் முழுவதும் 6 புதிய சிறப்பு நீதிமன்றங்களை அமைப்பது தொடர்பாக விரைந்து முடிவெடுக்க வேண்டும். அதுதொடர்பான விவரங்களை இரண்டு மாதங்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சிக்கன் பிரியாணி: முதல்வர் விஜய் பரிசீலனை செய்வார்

சென்னை, ஜூலை 29: அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சத்துணவில் சிக்கன் பிரியாணியைச் சேர்ப்பது தொடர்பாக முதல்வர் விஜய் பரிசீலனை செய்வார் என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

இது குறித்து சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது:

பள்ளிக் கல்வித் துறை சார்ந்து முதல்வரிடம் நான் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அதற்கான தரவுகளையும் அளித்துள்ளேன். சத்துணவுக்கு ஒரு குழந்தைக்கு ரூ.11.50 தான் வழங்கப்படுகிறது. கோதுமை, உப்புமா, ரவை உப்புமா ஆகியவை காலை உணவில் வழங்கப்படுகின்றன. அதனால் குழந்தைகளுக்கான உணவை ஊட்டச்சத்து, அறுசுவையுடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சத்துணவு விநியோகத்தில் காமராஜர், எம்ஜிஆர் உள்ளிட்ட முன்னாள் முதல்வர்கள் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளனர்.

அதேபோல ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து குழந்தைகளுக்கு வாரத்துக்கு ஒரு முறை சிக்கன் பிரியாணி வழங்க வேண்டும் என எனக்கும் ஆசை இருந்தது. இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளேன்.

இதில் பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்டுள்ளன. இது குறித்து முதல்வர் பரிசீலனை செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு தமிழக பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்க வேண்டிய நிதியை நிலுவையில் வைத்திருப்பதால், நமது குழந்தைகளின் வருங்காலம் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகிறது.

இதில் லாபத்தை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், அந்த நிதி அறிவுக்கான முதலீடு. இந்தத் தொகையை வழங்காமல் இருப்பதற்கு மொழி, கொள்கைப் பிரச்னைகளை காரணங்களாக கூறுவதை ஏற்க முடியாது.

எனவே பள்ளிக் கல்விக்கான நிதியை மத்திய அரசு விடுவிக்க வேண்டும். இதற்காக பேச்சு, சட்ட நடவடிக்கை என என்னென்ன நடவடிக்கைகள் தேவையோ அவற்றை முன்னெடுப்போம் என்றார்.

தனியார் பள்ளிகளின் கட்டண நிர்ணயக் குழு சீரமைப்பு

தனியார் பள்ளிகளின் கல்விக் கட்டண நிர்ணயக் குழு மறு சீரமைப்பு செய்யப்பட்டு, குழு நிர்ணயிக்கும் கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டும் என அறிவிக்கப்படும் என்று அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

தனியார் பள்ளிகளுக்கு 3 ஆண்டுகள் கடந்தும்கூட அனைத்து தரச்சான்றிதழ்களும் இருந்தும், தொடர்பே இல்லாமல் கட்சி நிதி எனக் கூறி, ஒரு பள்ளிக்கு ரூ.25 லட்சம் வசூலிக்கப்பட்ட நிலையை இந்த ஆட்சியில் மாற்றியுள்ளோம். அந்த லஞ்சத்தை ஒழித்திருக்கிறோம். இதனால், அவர்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பரிகாரமாக பள்ளி மாணவர்களுக்கு கட்டணங்களைக் குறையுங்கள் என்று வேண்டுகோள் வைத்திருக்கிறேன். இந்த அரசு ஒருபோதும் தனியார் பள்ளிகளுக்கு சாதகமாக செயல்படவில்லை. தனியார் பள்ளிகள் கட்டணங்களைக் குறைத்ததாக எனக்கு தகவல் வரவில்லை. கட்டணங்களைக் குறைக்காவிட்டால், அரசு நிர்ணயிக்கும் கட்டணங்களை மட்டுமே வசூலிக்க வேண்டும் எனத் திட்டவட்டமாக நடவடிக்கை எடுப்போம்.

இதற்காக பள்ளிக் கல்வித் துறை கல்விக் கட்டண நிர்ணயக் குழு மறு சீரமைப்பு செய்யப்பட்டு, குழு நிர்ணயிக்கும் கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டும் என அறிவிக்கப்படும்.

மேலும், தனியார் பள்ளிகள் கூடுதலாக செய்யும் வசதிகளை, அவர்களது இணைய தளத்தில் குறிப்பிட்டு, அதற்கு கட்டணம் பெறலாம். ஆனால், நன்கொடைகள் பெறுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்றார்.

தேரோட்டம்...

மதுரை மாவட்டம், அழகர்கோவிலில் புதன்கிழமை நடைபெற்ற கள்ளழகர் கோயில் ஆடிப் பெருந்திருவிழா தேரோட்டம்.

பிளஸ் 2 அசல் மதிப்பெண் சான்றிதழ் இன்று முதல் விநியோகம்

சென்னை, ஜூலை 29: பிளஸ் 2 முடித்த மாணவர்கள் தங்களுக்கான அசல் மதிப்பெண் சான்றிதழை அவரவர் படித்த பள்ளிகளில் வியாழக்கிழமை (ஜூலை 30) முதல் பெற்றுக் கொள்ளலாம் என அரசுத் தேர்வுகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மாநில அரசின் பாடத்திட்டத்தில் பிளஸ் 2 வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் கடந்த மே 8-ஆம் தேதி வெளியிடப்பட்டன. மாணவர்கள் மேற்படிப்புக்கு விண்ணப்பிக்க வசதியாக மே 13-ஆம் தேதி தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட்டது. இதைப் பயன்படுத்தி மாணவர்கள் மருத்துவம், பொறியியல், சட்டம், விவசாயம் உள்ளிட்ட தொழிற்கல்வி படிப்புகளில் சேரவும், கலை அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற விண்ணப்பித்தனர்.

இதற்கிடையே பிளஸ் 2 முடித்த மாணவர்களுக்கு அசல் மதிப்பெண் சான்றிதழ் ஜூலை 30-ஆம் தேதி முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அசல் மதிப்பெண் சான்றிதழ் வியாழக்கிழமை முதல் வழங்கப்படவுள்ளது இதுதொடர்பாக அரசு தேர்வுகள் இயக்குநர் கே.சசிகலா புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடந்த மார்ச் நடைபெற்ற மேல்நிலை பொதுத்தேர்வு (பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2) எழுதிய தேர்வர்களுக்கு (மறுகூட்டல், மறுமதிப்பீடு தேர்வர்கள் முடிவு உள்பட) அசல் மதிப்பெண் சான்றிதழ் ஜூலை 30 முதல் வழங்கப்படும்.

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்களிலும் அசல் மதிப்பெண் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும், தனித்தேர்வர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்கும்போது சமர்ப்பித்திருந்த அசல் மதிப்பெண் சான்றிதழை இதுவரை பெறாமல் இருப்பின், அவர்கள் தேர்வெழுதிய மையத்திலேயே அதை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ICICI Bank

கிளை அலுவலகம்: ICICI பேங்க் லிமிட்டெட், SP-24, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600058.

பொது அறிவிப்பு - கடனீட்டுச் சொத்து விற்பனைக்கான டெண்டருடன் கூடிய மின்-ஏலம்

[பார்க்க விதி 8(6) க்கான விதிமுறைகள்]

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு

அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு - 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6)-ஷரத்துகள் கீழ்

இதன் மூலம் பரவலாக பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம் / ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகள், ICICI பேங்க் லிமிட்டெட்-ன் அதிகாரபூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனத்தில் (PHYSICAL POSSESSION) எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தச் சொத்துகள் பின்வருமாறு "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு", உள்ளது என்னவோ அது" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன. அதன் கருக்கமான விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்.	கடன்தாரர்(கள்) / கூட்டு-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களின் பெயர் / கடன் கணக்கு எண்.	கடனீட்டுச் சொத்து(க்களின்) விபரங்கள் தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றுடன்	நிலுவை தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை / டேவணித் தொகை	சொத்து ஆய்வு நாள் & நேரம்	மின் - ஏல நாள் & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	திரு. ராஜு சடையப்பன் (கடன்தாரர்) திருமதி. மகாலட்சுமி ராஜு (கூட்டுக் கடன்தாரர்) கடன் கணக்கு எண்: LBCHE00002049495 LBCHE00002061060	ஃபிளாட் எண் 808, 8-வது தளம், டவர்- H 8, புதிய எண் 135 (பழைய எண் 180), அருண் எக்செல்லோ - டெம்பிள் கிரீன் ஹைட்ஸ் ஃபேஸ்-II, மாத்தூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் - 602105. குடியிருப்பு ஃபிளாட் 1BHK, மேல் கட்டுமானப் பரப்பளவு 695 சதுர அடி, பிரிக்கப்படாத பங்கு 233.5 சதுர அடி.	ரூ. 42,22,153/- 23.07.2026 அன்றுள்ளபடி	ரூ. 17,00,000/- / ரூ. 1,70,000/-	04.08.2026 முற்பகல் 11.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை	21.08.2026 காலை 10.30 முதல் முற்பகல் 11.30 வரை
2.	திரு. சிவக்குமார் C (கடன்தாரர்) திருமதி. அருணா G (கூட்டுக் கடன்தாரர்) கடன் கணக்கு எண்: LBCHE00001855595	ஃபிளாட் 26, இரண்டாம் தளம், பிளாக் எண்: 33, "TVH Svaya", ஸ்ரீபெரும்புதூர் கிராமம் & வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் - 602105. குடியிருப்புத் ஃபிளாட் - 2 BHK, மேல் கட்டுமானப் பரப்பளவு 665 சதுர அடி, பிரிக்கப்படாத பங்கு 473 சதுர அடி.	ரூ. 18,06,796/- 23.07.2026 அன்றுள்ளபடி	ரூ. 15,00,000/- / ரூ. 1,50,000/-	05.08.2026 முற்பகல் 11.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை	21.08.2026 காலை 10.30 முதல் முற்பகல் 11.30 வரை
3.	திரு. சீனிவாசன் ராமானுஜம் (கடன்தாரர்) திருமதி. தமிழ் செல்வி சீனிவாசன் (கூட்டுக் கடன்தாரர்) கடன் கணக்கு எண்: LBCHE00002062593	ஃபிளாட் எண் S1, இரண்டாம் தளம், மனை எண் 70A1, முல்லை அடுக்குமாடி குடியிருப்பு, செல்வ நகர், வரதராஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்-600048. குடியிருப்பு ஃபிளாட் 2BHK, மொத்தக் கட்டுமானப் பரப்பளவு 1113 சதுர அடி, பிரிக்கப்படாத பங்கு 700 சதுர அடி.	ரூ. 22,90,595/- 23.07.2026 அன்றுள்ளபடி	ரூ. 27,50,000/- / ரூ. 2,75,000/-	06.08.2026 முற்பகல் 11.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை	21.08.2026 காலை 10.30 முதல் முற்பகல் 11.30 வரை
4.	ஸ்ரீ சாய் அக்ரோ டிரேடர்ஸ் (கடன்தாரர்) மீனாட்சி M & ரவிகுமார் P (கூட்டுக் கடன்தாரர்) கடன் கணக்கு எண். TBCHE00006985763	ஃபிளாட் எண். F1, முதல் தளம், சிவராம்ஸ் ஹாமில்டன், பிளாக் எண்.13, TNHB சாலை, இந்திரா நகர் 28வது குறுக்கு தெரு, அடையாறு, சென்னை-600020. குடியிருப்பு ஃபிளாட் மொத்தக் கட்டப்பட்ட பரப்பளவு 1596 சதுர அடி, மற்றும் 602 சதுர அடி பிரிக்கப்படாத நிலப் பங்கு	ரூ. 4,39,81,589/- 23.07.2026 அன்றுள்ளபடி	ரூ. 1,00,00,000/- / ரூ. 10,00,000/-	07.08.2026 முற்பகல் 11.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை	21.08.2026 காலை 10.30 முதல் முற்பகல் 11.30 வரை
5.	ஸ்ரீ சாய் அக்ரோ டிரேடர்ஸ் (கடன்தாரர்) மீனாட்சி M & ரவிகுமார் P (கூட்டுக் கடன்தாரர்) கடன் கணக்கு எண். TBCHE00006985763	ஃபிளாட் எண். S1, இரண்டாம் தளம், சிவராம்ஸ் ஹாமில்டன், பிளாக் எண்.13, TNHB சாலை, இந்திரா நகர் 28வது குறுக்கு தெரு, அடையாறு, சென்னை-600020. குடியிருப்பு ஃபிளாட் மொத்தக் கட்டப்பட்ட பரப்பளவு 1596 சதுர அடி, மற்றும் 601 சதுர அடி பிரிக்கப்படாத நிலப் பங்கு	ரூ. 4,39,81,589/- 23.07.2026 அன்றுள்ளபடி	ரூ. 1,00,00,000/- / ரூ. 10,00,000/-	07.08.2026 முற்பகல் 11.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை	21.08.2026 காலை 10.30 முதல் முற்பகல் 11.30 வரை

இணையவழி ஏலமானது, எமது ஏல முகமையான M/s. Matex Technologies Private Limited-ன் இணையத்தளம் வாயிலாக (இணைய இணைப்பு - assets.matexauctions.com) நடைபெறும். மொத்த கடன் நிலுவையை வட்டியுடன் சேர்த்து 20.08.2026 மாலை 5.00 மணிக்குள் செலுத்துவதற்கு கடைசி வாய்ப்பு அடமானதாரர்கள் / அறிவுப்புதாரர்களுக்கு இதன் மூலம் அளிக்கப்படுகிறது. தவறினால், கடனுக்கு ஈடான இந்தச் சொத்து திட்டமிட்டபடி விற்கப்படும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்(கள்), தங்களது டேவணித் தொகையை (EMD), வரைவோலையை (DD) ('E' நிரல் குறிப்பிட்டுள்ளபடி) ICICI பேங்க் லிமிட்டெட், SP-24, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-600058-ல் 20.08.2026 நாளன்று மாலை 3.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகு, அவர்கள் தங்களது ஏலப்புள்ளிகளுடன், EMD செலுத்தியதற்காக வங்கி ஒப்புகை அளித்த DD ஆதாரத்தை ஸ்கேன் செய்து மேற்குறித்த இணையதளத்தில் 20.08.2026 அன்று மாலை 5:00 மணிக்குள் அல்லது முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி இணையத்தளத்தில் தங்களது ஏலப்புள்ளிகளைச் சமர்ப்பிக்க முடியாமல் போகும் ஏலதாரர்கள் அதற்கான டெண்டர் ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதிகளை 20.08.2026 அன்று மாலை 5:00 மணிக்குள் அல்லது அதற்கு முன்னர் ICICI பேங்க் லிமிட்டெட், SP-24, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-600058-ல் சமர்ப்பிக்க வேண்டும். EMD தொகையானது "ICICI BANK LIMITED" என்ற பெயரில் "சென்னை"-இல் மாற்றத்தக்க வகையிலும் ஒரு தேசியமயமான / ஷெட்யூல்டு வங்கியின் DD/PO வடிவிலும் இருந்திட வேண்டும் என்பதை கனிவுடன் கவனத்தில் கொள்ளவும்.

மேலும், மின் ஏலம் அல்லது டெண்டர் சமர்ப்பிப்பது பற்றிய கூடுதல் விளக்கங்களுக்கும் தொடர்பான விதிமுறை நிபந்தனைகளுக்கும் சொத்துகளைப் பார்வையிடுவதற்கும் தொடர்பு கொள்ளவும்: ICICI பேங்க் லிமிட்டெட் ஊழியர் அலைபேசி எண் 7550214251.

இந்த சொத்து விற்பனைக்கு உதவிடும் வகையில் எந்தப்படுத்துதல் முகவர்களான 1. M/s. Auction Bazaar 2. M/s. Matex Net Pvt Ltd., ஆகியவையும்கூட ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.

காரணம் எதையும் குறிப்பிடாமல் எந்தவொரு அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க அதிகாரபூர்வ அலுவலருக்கு உரிமையுண்டு.

விற்பனை குறித்த விரிவான விதி முறை நிபந்தனைகளுக்கு பார்க்க வேண்டிய இணையத்தளம் : www.icicibank.com/n4p4s

தேதி : 30.07.2026
இடம் : சென்னை & ஸ்ரீபெரும்புதூர் & காஞ்சிபுரம்

அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI பேங்க் லிமிட்டெட்

டச்சு பேங்க் AG

பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனை

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் ("மேற்சொன்ன சட்டம்")- இன் கீழ் இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர் தமது பல்வேறு வியாபார அலுவலகங்களில் ஒன்றை **# 4-4A, வெஸ்டர்ன் டவர், சன்னி சைட், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 என்ற முகவரியில் கொண்டுள்ள M/s. டச்சு பேங்க் AG ("டச்சு பேங்க் AG")** இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(2) - இதனுடன் தொடர்புடைய- கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை மீதான உரிமைகள் (அமலாக்கம்) விதிகள்'2002 ("மேற்சொன்ன விதிகள்) இன் விதி 9 இன் கீழ் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தின் படி, 07.11.2024 நாளிடப்பட்டகோரிக்கை அறிவிப்பை கடன்தாரர்(கள்) / கூட்டு கடன்தாரர்(கள்) **M/S தர்மராஜ்** அண்ட் கோ ("கடன்தாரர்") திருமதி. பாலசுந்தரி R (கூட்டுக்கடன்தாரர்) செல்வி. லாவண்யாஸ்ரீ .R (கூட்டுக்கடன்தாரர்)மற்றும் திரு.பாலகுமாரன் R (கூட்டுக் கடன்தாரர்) ஆகியோருக்கு அனுப்பி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகை **ரூ.5,45,38,480.48/- (ரூபாய் ஐந்து கோடியே நாற்பத்தைந்து லட்சத்து முப்பத்தெட்டாயிரத்து நானூற்று எண்பது மற்றும் நாற்பத்தெட்டு பைசா மட்டும்)** மற்றும் அதற்கான வட்டி சேர்த்து மேற்சொன்ன அறிவிப்பைப் பெற்ற தேதியிலிருந்து 60 நாள்களுக்குள் திருப்பி செலுத்த கோரினார்.

கடன்தாரர் அத்தொகையை திருப்பி செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரருக்கும், மற்றும் பரவலாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ் விவரிக்கப்பட்டு, வங்கிக்கு அடமானம் செய்துள்ள சொத்தை மேற்சொன்ன நிலுவைத்தொகையை வசூலிப்பதற்காக, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(4) - அதற்குத் தொடர்புடைய - மேற்சொன்ன விதிகளில் விதி 8 ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி **20.12.2025** நாளன்று நேரடி சுவாதீனம் எடுத்துள்ளார்.

தற்போது, பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட சொத்து, மூடிய உறையிலிட்ட விலைப்புள்ளிகளை வரவேற்பதன்மூலம், பொது ஏலத்தில் இருக்கின்ற இடத்தில் மற்றும் இருக்கின்ற நிலையில் என்ற அடிப்படையில், இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிய செயல்முறைகளின் படியும் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியும், 17.09.2026 ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு டச்சு பேங்க் AG, # 4-4A, வெஸ்டர்ன் டவர், சன்னி சைட், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 என்ற முகவரியில் விற்பனை செய்யப்படும்.

வ. எண்.	கடனீட்டு சொத்து முகவரி	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல நாள்
1.	இனம் 1 - இன்றியமையாப் பகுதிகள் மற்றும் பாகங்கள் அனைத்துடனும் கூடிய வீடு, நிலம் மற்றும் வளாகம் ஆவணத்தின் படி பழைய கதவு எண் 10 & 10A, புதிய கதவு எண் 8 & 8/2, தற்போதைய எண் 42, வீரராகவன் சாலை, புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 081.அமையப்பெற்ற R.S. எண்: 4068/2 & 4068/1 (பகுதி) 4756 சதுர அடி பரப்பளவு எல்லைகள்: வடக்கு - R.S. எண் 4068/1 மற்றும் வீரராகவன் சாலை; தெற்கு - கடலை முத்து நாடார் தெரு; கிழக்கு - கண்ணுப்பிள்ளை தெரு; மேற்கு - R.S. எண் 4069. அளவீடுகள்: தென்வடல் கிழபுறம் 102 அடி; தென்வடல் மேல்புறம் 96 அடி; கிழமேல் வடபுறம் 49 3/4 அடி; கிழமேல் தென்புறம் 46 அடி. இது ராயபுரம் சார் பதிவு மாவட்டம் மற்றும் வட சென்னை- பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. இனம் 2: - இன்றியமையாப் பகுதிகள் மற்றும் பாகங்கள் அனைத்துடனும் கூடிய வீடு, நிலம் மற்றும் வளாகம் ஆவணத்தின் படி பழைய கதவு எண் 10 , புதிய கதவு எண் 2, தற்போதைய எண் 42, வீரராகவன் சாலை, புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600 081.அமையப்பெற்ற R.S. எண்: 4068 (பகுதி) 2167 சதுர அடி பரப்பளவு இதன் எல்லைகள்: - வடக்கு: வீரராகவன் சாலை; தெற்கு: 'A' அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து; கிழக்கு: கண்ணுப்பிள